சொல்லுகிறபோது இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் ஒரு விண்ணப்பம் கொடுத்ததின் பேரில் அங்கு ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் 'பீசிபிலிட்டி' இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்த பின்னால் அதையும் சேர்த்து அமுல்படுத்த மைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த வேண்டுகோளின் மீது பதினைந்து நாட்களுக்குள்ளாக அறிக்கை வேண்டுமென்று கேட்டு, அந்த அறிக்கையினைப் பெற்று, புதிதாக உலக வங்கி மற்றும் இந்திய அரசு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்து ஒரு செயற்குறிப்பை அரசு தயாரித்துள்ளது. அதை உலக வங்கி ஏற்றுக்கொண்ட பிறகு ஏனாதி கிராமம் பெரியாறு நீர்ப்பாசன வரம்பிற்குள்ளே கொண்டு வரப்பட்டு மூன்று கண்மாய்கள் அதற்கு கீழே 269.87 ஏக்கர் பயன் அடைவதற்கான வாய்ப்பை தயார் செய்திருக்கிறது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நீர்ப்பாசனத்தில் விடப்பட்டிருக்கிற ஆயக்கட்டு பகுதிகளிலே, ஆர்.எஸ். மங்கலம் போன்ற இடங்களை இந்த திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கு உலக வங்கியுடன் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் மாம்பழத்து அணை கட்டும் திட்டம்

* வினா எண் 868—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் வில்லுக்குறிக்கு வடக்கே உள்ள மலைப்பகுதியில் மாம்பழத்து அணை என்ற புதிய நீர்த்தேக்கம் ஒன்று கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில், மாம்பழத்துறை ஆற்றில் அணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. எனினும், மாம்பழத்துறையாற்றின் உபரிநீரை திருப்பிவிட்டு, பத்மநாபபுரம்-புத்தனார் வாய்க்காலின் கீழுள்ள ஆயக்கட்டு களின் தேவையை நிறைவு செய்யும் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. திருப்பிவிடுவதற்கான உபரிநீரின் அளவு மிகவும் குறைவு என்றும், எதிர்பார்க்கப்படும் பயன்களும் அதிகம் இல்லை என்றும், எனவே இத்திட்டத்தை கைவிடலாமெனவும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்த கருத்தை ஏற்று அரசு இத்திட்டத்தை கைவிட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீர்த்தேக்கம் கட்டப் பெற்றால் அதிகப்படியான நிலங்கள் பாசனவசதி பெற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை புனர் பரிசீலனை செய்து நீர்த்தேக்கம் கட்ட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறித்து ஏற்கெனவே மறு ஆய்வு செய்யப்பட்டுதான் இந்தக் கருத்து வந்திருக்கிறது. உபரி நீர் மிகக் குறைவாக இருக்கிறதாலே, பாசனத்திற்குத் தேவை யான நீரை வழங்க முடியாது என்று தெரிகிறது. இரண்டு முறை பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே மறு ஆய்வு செய்யத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாம்பழத்துறை அணைத் திட்டம் தேவையில்லை என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்கிறதெல்லாம் வில்லுக்குறிக்கு வடக்கே இருக்கிற மலை யிலே ஒரு சிறிய நீர்த்தேக்கம் அமைத்தாலே கூட 500 ஏக்கரா நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே ஒரு சிறிய நீர்த்தேக்கத்தை அமைக்க அரசு முன்வருமா ? அவ்வாறு செய்வதன் மூலமாக வில்லுக்குறி பகுதிக்கு அருகாமையிலிருக்கும் சுமார் 500 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கும், ஆகவே அதைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பயன் விகித திட்டங்களின் அடிப்படைகளில் நாம் இப்போது மாறுதல் செய்து இருக்கிறோம். ஒரு டன் உணவு உற்பத்தி கூடுதலாக அல்லது புதிதாக உற்பத்தி செய்ய முடியும் என்றால்

[1981 ஏப்ரல் 24

3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்பதை இப்போது 15,000 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். அவ்வாறு செய்திருப்பதன் மூலமாக நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் அரசு முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை பரிசீலிக்கிற முறையிலே திரும்பவும் அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே வேண்டுமானால் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது குறித்து அவர்கள் அரசுக்கு தனியாக எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினா-விடை நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பேச்சிப்பாறை, சிற்றாறு அணைகளில் தேங்கி நிற்கும் நீரை சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் திட்டம்.

* வினா எண் 869—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, சிற்றாறு போன்ற அணைகளில் நீர்ப்பாசனத்திற்கு பாயும் மட்டத்தின் கீழே தேங்கி நிற்கும் 30 அடி தண்ணீரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சாகுபடி செய்ய முடியும் என அரசுக்குத் தெரியுமா?

(ஆ) பருவமழை தவறும் காலங்களில் இந்த தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்த ராட்சச இயந்திரங்களைக் கொண்ட Pumping Scheme திட்டத்தை கொண்டுவர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாராம்: (அ) மற்றும் (ஆ): பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் வாய்க்கால் மதகு மட்டத்திற்குக் கீழே 950 மி.க. அடி நீர் (Dead Storage) உள்ளது. சித்தாறு நீர்த்தேக்கத்தில், தண்ணீர் பாயும் மட்டத்திற்குக் கீழே உள்ள நீர் மிகக் குறைவானது. இந்த நீரை இயந்திரங்களைக் கொண்டு மேலேற்றுவது சாத்தியமில்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறையிலே சித்தாறிலே மதகுக்கு கீழே உள்ள தண்ணீரைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1954ஆம் ஆண்டிற்கு முன்னாலே அது திருவிதாங்கூர் ராஜ்யத்தினுடைய பகுதியாக இருந்த காலத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த, அமைச்சராக இருந்த